# வள்ளலார்
## வாழ்வும் வாக்கும்



கடைவிரித்தேன் கொள்வாரில்லை

பதிப்பாசிரியர்

முனைவர் இரா.இரவி

இக்கருத்தரங்கக் கட்டுரைகள் எஸ்.ஆர்.எம் கல்வி நிறுவன நிதி நல்கையுடன் வெளியிடப்பட்டது

**நூல் உருவாக்கம்**

தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்,
எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
வடபழனி, சென்னை-600026.

# வள்ளலார் வாழ்வும் வாக்கும்


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | இரா.இரவி, தமிழ்த்துறை© |
| முதல் பதிப்பு | : | ஜூலை 2024 |
| நூல் வடிவமைப்பு | : | அனுராதா |
| அட்டை வடிவமைப்பு | : | லார்க் பாஸ்கரன் |
| வெளியீடு | : | பரிசல் புத்தக நிலையம்,<br>P பிளாக். எம்.எம்.டி.ஏ காலனி,<br>அரும்பாக்கம், சென்னை-600106 |
| அலைப்பேசி | : | 93828 53646, 88257 67500 |
| மின்னஞ்சல் | : | parisalbooks2021@gmail.com |
| பக்கங்கள் | : | 372 |
| விலை | : | ரூ. 380/- |
| ISBN | : | 978-81-19919-83-3 |

# பொருளடக்கம்

1. காலனிய முரண்களுக்கிடையில் அறிவுவாதம் பேசிய சிந்தனைவாதி வள்ளலார் - முனைவர் செ.சௌந்தரி 11
2. வள்ளலார் வாழ்வியல் பணிகள் - முனைவர்.மா.லெட்சுமி 21
3. வள்ளல் பெருமான் வகுத்த பசித்திரு! தனித்திரு! விழித்திரு! - முனைவர் ச.அய்யர் 28
4. வள்ளலாரும் மெய்யியல் கோட்பாடும் -முனைவர்.அ.சுகன்யா 33
5. வள்ளலாரின் இறையியல் சிந்தனை - முனைவர் ஆ. பிரின்ஸ் சார்லஸ் 42
6. வள்ளலாரின் உரைநடை விண்ணப்பங்கள் - முனைவர் ம. இளங்கோவன் 54
7. புரட்சித்துறவி வள்ளலார் பாடல்களில் பயன்பாட்டுத் தமிழ் - முனைவர். பா.ஜெயசுதா, 63
8. வள்ளலாரின் நேயமும், நெறிப்படுத்தும் மாண்பும் - முனைவர். ம. சித்ரகலா 68
9. வள்ளலார் உணர்த்தும் மனிதம் - முனைவர் ச.பிரவின்குமார் 77
10. என்றென்றும் வள்ளலார் - திருமதி ச.மீனாட்சி 85
11. அருட்பாவில் அகப்பொருள் ஆராய்ச்சி - தினேஷ்குமார் ப 92
12. வள்ளலாரின் பெருநெறி வாழ்வியல் - சு. கோபாலகிருஷ்ணன் 103
13. புரட்சித் துறவி வள்ளலார் மனு முறை கண்ட வாசகத்தில் பழமொழிகள் - முனைவர் த. ராஜீவ் காந்தி 110
14. சங்கம் நிறுவி சமத்துவம் வளர்த்த வள்ளலார் - மீ. செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் 119
15. வள்ளலார் வாழ்வும் வாக்கும் - கவியருவி ச. குமரவேல் 125
16. நன்மார்க்கம் தரும் சன்மார்க்கம் - முனைவர் கமலா முருகன் 131
17. வள்ளலார் பார்வையில் மாணிக்கவாசகர் - முனைவர் இரா. வள்ளி 136
18. அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை -முனைவர் பெ. ராகம்மாள் 144
19. வள்ளலாரின் வாழ்வியல் நெறிமுறைகள் - முனைவர் தே. இராணி எலிசபெத் 150
20. அருட்பெருஞ்சோதி வள்ளலார் - சு. ஜெயா 158
21. வள்ளலாரும் ஜென்னும் - முனைவர் வெ. பிரதீப் குமார் 165
22. வள்ளலார் பாடல்களில் அகமரபு - சு.சிவசங்கரி 171
23. வள்ளலார் கண்ட சீவகாருண்ய ஒழுக்கம் - மரகதவள்ளி 179

# வள்ளலாரின் நேயமும், நெறிப்படுத்தும் மாண்பும்

முனைவா ம. சித்ரகலா,
உதவிப் பேராசிரியா,
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.
அலைப்பேசி : 9842250753,
மின்னஞ்சல்: chitrababu1996@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

வள்ளலார் வாழ்ந்து காட்டிய நேயமிகு வாழ்விய அறங்களையும், இன்றளவும் அவரின் ஆன்மீக நெறி மக்கை நல்வழியில் பக்குவப்படுத்துகின்றது என்ற ஆள்மன உந்துதலி நோக்கில் "வள்ளலாரின் நேயமும், நெறிப்படுத்தும் மாண்பும் என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது இக்கட்டுரையில் உயிநேயம், மனமுருகி வேண்டல், சமுதா சீதிருத்த நெறி, ஆன்மீகப் பயிற்சி, முற்போக்குச் சிந்தனை, இல்ல நெறி போன்ற துணைத்தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்ட தோடு கட்டுரையின் நிறைவாக தொகுப்புரையும் வழங்க பட்டுள்ளதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாக அமைகின்றது.

## முன்னுரை

உலகத்தை உய்விக்க அந்தந்தக் காலங்களில் இறைவனின் அருட்பெருங்கருணையால் அருட்பெரும் சான்றோர்கள் தோன்றுவதால்தான் உலகம் இன்றளவும் நிலைப்பெற்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. அருள் நெஞ்சம் கொண்ட அந்த நல்லவாகளின் வாழ்க்கை குறிக்கோள் நிறைந்ததாக மட்டும் இல்லாமல் உயிர் நேயமுடனும் ஆன்மீக சக்தியால் உலகில் பெரும் மாற்றங்களை

ஏற்படுத்த முடியும் என்பதையும் உலகறியச் செய்து வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார். இன்றைய காலகட்டம் போட்டிகள் நிறைந்தது மட்டுமல்ல பொறாமைகளும் வஞ்சனை குணங்களும் குடிகொண்ட காலமாக உருமாற்றிக் கொண்டுள்ளது. நாம் வாழ பிறரை வதைக்கும் நிலைமட்டும் அல்லாமல் தான் வாழ பிரறைக் கொலை செய்யும் நிலையில் இவ்வுலகம் தள்ளாடிக் கொண்டுள்ளது. இந்நிலை மாற்ற தன்நிலை மறந்து உயிர் நேயம் கொண்டவர் களையும், சமுதாயம் மேன்மையுற தன்னையே இறைபணிக்கு அபணித்த செம்மல்களின் செயல் திறனையும் ஆராய்ந்தால் உலக நிலை மாற்றம் ஏற்படும் என்ற உன்னத நோக்கத்தோடு "வள்ளலாரின் நேயமும், நெறிப்படுத்தும் மாண்பும்" என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**உயிர்நேயம்**

நேயம் என்றால் அனைத்து மனிதாகளிடமும் அன்பு காட்டுவது கருணையோடு இருப்பது மனித நேயம் எனக் கூறலாம். இதில் உயிரிரக்கப் பண்பு என்பது மனித நேயத்தில் இன்றியமையாத இடம் பெறுகிறது எனலாம். பிறருக்கு துன்பம் அளிக்காமல் இருத்தல், இயலாதவாகளின் துன்பத்தைப் போக்குதல், இளகிய மனம், இரக்க குணம், நல்ல செயல்பாடுகளையும் நேயமிகு பண்பு என கூறலாம். மனித நேயரான சுவாமி விவேகானந்தா 1893 அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெற்ற உலக மதங்களின் பாராளுமன்ற கூட்டத்தில் உலக மக்கள் அனைவரையும் பார்த்து "சகோதர.. சகோதரிகளே..." என்று உரையாற்றி உலக மக்களிடையே தனது மனிதநேயப்பண்பை வெளிப்படுத்தினார். சிபிச்சக்கரவாத்தி காயப்பட்ட புறாவின் உயிரைக்காக்க தானே தாரசு தட்டின் மீது ஏறி நின்று புறாவின் உயிரைக் காப்பாற்றனார். இப்பண்பு உலக உயிர்கள் அனைத்திடமும் நேயம் வேண்டும் என்றும் இரக்க குணம் என்றும் மனிதனை நெஞ்சிறுத்திப் பாராட்டி சான்று கூறும் என்பதை உணாத்திச் சென்றுள்ளார்.

இலக்கியங்களின் வழி ஆராய்ந்தால் சங்க காலத்தில் வாழ்ந்த கணியன் புங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கூறினார். திருவள்ளுவப் பெருந்தகையோ

"அன்பின் வழியது உயாநிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (குறள்.80)

என்றார். 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசினையும் 1980ல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரதரத்னா விருதினையும் பெற்ற அன்னை தெரேசா அவாகளை உலக மனித நேயா என்றே சொல்லலாம். இவா காசநோய், தொழுநோய் போன்ற நோயால் பாதிக்கப்பட்டவாகளுக்கான நலவாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை நடத்தினார். இவா இறப்பின்போது அன்பின் பணியாளர் சபையில் 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்களும் இயங்கிக் கொண்டிருந்தது. இது இவருடைய கருணையால் கிடைத்த பெரும்பேறன்றோ!

அவ்வகையில் "அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி" ஆக திகழும் வள்ளலாரின் உயிர் நேயமோ வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய மகானின் உயிர் நேயப்பண்பு உற்று நோக்கத்தக்கது எனலாம். அவா ஏழை எளியவாக்கு உதவியது மட்டும் அல்லாமல் உயா தாழ்வு சமுதாயத்தில் இருக்க கூடாது என சமரசசன்மாக்க சங்கத்தையும் ஏற்படுத்திய பெருந்தகை வள்ளலார்.

## மனமுருகி வேண்டல்

இறைவனிடம் மனதார மனமுருகி நல்லதை வேண்டின் நமக்கு நல்லதே நடக்கும். இதனை சுவாமி விவேகானந்தா "நீ நினைப்பது எதுவோ அதுவாகவே நீ ஆகிறாய்...!" என்றும் நான் இப்போது இருக்கும் நிலைக்கு நானே பொறுப்பு என்றும் மொழிந்தார். ஆக மனத்தில் நோமுறையான எண்ணங்களை வைப்பது சிறப்பு எனலாம். தாயுமானவா "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்றார். திருமூலரோ,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே"

(திருமந்திரம் பா. 1823)

என்றார். "காதலில் அன்பின் பக்தியில் கண்ணீ வருவதை" "காதலாகி கசிந்து கண்ணீ மல்கி" என்கிறது தேவாரம். அவ்வகையில் வள்ளலார் சிறுவயதில் தன்நிலை கண்டு தானே வேதனை உற்று கந்தப் பெருமானை நோக்கி வேண்டல் "அருள் நாயகா! முருகப் பெருமானே! கந்தக் கடவுளே! கடம்பா! கார்த்திகை பாலா! தலமோங்கும் சென்னையில் கந்தகோட்டத்துள் வளா சண்முகத் தெய்வமணியே! நான் உற்றாருக்கும் உறவினாக்கும் உதவாக்கரை பிள்டளையானேனே! உலகியல் நடப்புகள் ஒன்றும் ஒட்டாத உள்ளத்தை கொண்டேனே! இதனால் எல்லோரின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் ஆளாகிவிட்டேனே! பெற்ற தாயாருக்கும், பேணிக் காக்கும் தமையனாருக்கும், தாயன்பில் உற்றவாறு என்னை வளாக்கும் அண்ணியாருக்கும் வேதனை தரும் பிள்ளையானேனே! இந்த உலகில் நடப்பை என்னவென்று அறிவேன்? ஏதென்று கருதி விலகுவேன்? எனக்கு அருள்செய்வீ, ஐயனே! என்மீது கருணை வைத்துக் காத்தருள்வீ கந்தப்பெருமானே! ஏடும் எழுத்தும் அறியாத இப்பிள்ளையைக் கல்வி கற்க மாட்டாத மூடமகன் என்கின்றனரே! வழிக்கு வராத பின்னை என்கின்றனரே! இந்த அபவாதத்திலிருந்து என்னைக் காத்தருள்வீ குகப்பெருமானே! தேவரீ! எனக்கு தாயும் தந்தையும் குருவுமாக இருந்து, ஏடகத்தே எழுதாத மறைகள் எல்லாம் என்னுள்ளே எழுதி அருள்புரிய வேண்டும்! தேவரீ, அருள்புரிய வேண்டும்! வாய்மணக்க உளமினிக்க உம்புகழை நான் பாட அருள்செய்ய வேண்டும் தெய்வசிகாமணியே!" (பா. 37) என்று வேண்டினார்.

இராமலிங்கத்தின் வேண்டுதலுக்கு செவிசாத்து அருள்புரிந்தான் கந்தவேள். அடுத்தகணம் அவா "கணீர்" குரலில் "திருஓங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள்" (திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்க்கை வரலாறு ப. 37) என்ற பாடலைப் பாடத்தொடகினார்.

ஆக அவர் மனமுருகி வேண்டியதும் தன் தவறுகளை உணாந்ததும், தன் குடும்ப நிலை, உறவுகளில் மனநிலை தன்நிலை என பலவாறு வேண்டியதும் உள்ளத்தின் வெளிப்பாடு. அவ்வெளிப்பாட்டால் இறையருள் முழுமையாக கிடைத்தது. இன்றைய கால கட்டத்தில் உள்ளவாகளுக்குத் தன் தவறுகளை

உணரும் மனப்பக்குவமோ, குடும்ப நிலை உணர்ந்து நடக் நிலைப்பாடுகளோ, உறவுகளின் மனநிலை உணாந்து செயல்படு பக்குவமோ இல்லை. யார் என்ன நினைத்தால் என்ன? என் மகிழ்ச் தான் எனக்கு முக்கியம் என்று இருக்கும் இளைய சமுதாயத்தினருக் வள்ளல் பெருமானின் வேண்டுதல் ஒரு பாடமாக அமை வேண்டும் என்ற உணாவே இவ்விடத்தில் மேம்பட்டது எனலாம்.

## சமுதாய சீர்திருத்தவாதி

வள்ளலாரின் தம் படைப்பான திருவருட்பாவில் 600 பாடல்களுக்கு மேல் படைத்துள்ளார். அப்பாடல்கள் அனைத்து சமுதாய ஒழுக்கங்களைப் பேணுவதாகவும், அரசியல் பொருளாதாரம், கலை இலக்கியம், பண்பாடு, சாதி சம வேறுபாடுகளைக் கலைந்து சமரசப் போக்கை ஏற்படுத்துதல், உயி நேயம், தேசிய நேயம், பக்தி முக்தி, சித்தி என அனைத்து சமுதா சிக்கல்களையும் சீர்திருத்த வேண்டி பகுத்தறிவு சிந்தனையுடன் சமரச சுத்த சன்மார்க்க கொள்கைகளைப் புகுத்தி மனிதகுல நலவாழ்வு வாழ வாழ்ந்து காட்டிச்சென்ற மகான் வள்ளலார். சாதி பேதங்களை ஒழிக்க,

> "நால்வருணம் ஆசிரமம் ஆனநம் முதலா
> நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே
> மெய்வருணம் தோல்வருணம் கண்டறிவா ரிலைநீ
> விழித்துப்பார் என்றெனக்கு விளம்பிய சற்குருவே"
>
> (திருவருட்பா.பா. 4174)

என்று பாடினார். சுயமரியாதை இயக்கக் கருத்துக்களை மக்களிடம் விதைக்கும் பெரியார் 1935ஆம் ஆண்டு வள்ளாலாரின் திருவருட்பா பாடல்களில் ஆறாம் திருமுறையில் உள்ள 100 பாடல்களை குடியரசுப் பதிப்பகத்தின் 3ஆம் வெளியீடாக இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு என்ற பெயரில் வெளியிட்டார் என்பது ஈங்கு குறிப்பிடத்தக்கது.

மூடநம்பிக்கை யுடன் உழன்று கொண்டிருக்கும் மக்களைப் பக்குவப்படுத்த எண்ணிய வள்ளல்பெருமான்,

"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீ அழிதல் அழகலவே"
(மேலது பாடல். 5564)

என்றும்

"கலை உணர்த்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
(மேலது பா. 3768)

என்றும் தனது பகுத்தறிவுச் சிந்தனையைப் பட்ட வாத்தனமாகப் பாடிய புரட்சியாளா வள்ளல்பெருமான்.

## முற்போக்குச் சிந்தனை

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதும் விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதும் பழமொழி. சிறுவயதில் சொற்பொழிவாற்றிய வள்ளல் பெருமான் ஞானம் எது? கருணை எது? என்பதை சுந்தரர், திருஞானசம்பந்தர் இவர்களில் செயல்திறன்களை வைத்து சொற்பொழிவாற்றுபோது, "திருமுறைகளில் முதலாவது ஞானசம்பந்தா வாக்கு. திருஞானசம்பந்தர் வயதில் சிறியவராயினும், ஞானத்தில் பெரியவா. தம்முடன் கயிலைக்கு வந்த சேரமான் பெருமாள் நாயனாரை உள்ளே அழைத்துச் செல்லவில்லை சுந்தரா. ஆனால் சம்பந்தா தம் திருவமணத்துக்கு வந்த அத்தனை பேருக்கும் சிவலோகக் காட்சியளித்தார். அத்துணைக் கருணையுள்ளம் படைத்தவா சம்பந்தா. கருணை வேறு, ஞானம் வேறு என்று சிலா சொல்லுகிறார்கள். அது பிழை. ஞானத்தின் பயன்தான் கருணை" என்று கூறுகிறார்.

இன்றைய கால கட்டத்தில் மனிதன் நிலையும் அவ்வாறே தான் எதை விரும்புகிறோமோ அதை பிறருக்குக் கொடுத்தல் சிறப்பு. ஆனால் தனக்கு எது வேண்டாம் என்று எதை வைத்திருக்கிறோமே அதை கொடுத்து விட்டு தியாகம் செய்தேன் தருமம் செய்தேன் என்று விளம்பரம் செய்வது காலத்தின் கண்கூடே. இதனை திருவள்ளுவர்,

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதரின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை" (குறள். 315)

என்று கூறுகிறார். நமக்கு கிடைத்த நல்லவற்றை நினை மன நெகிழ்வதோடு பிறருக்கும் அந்த நல்லதைச் செய்து ஞானி வேண்டும். இவ்வாறு இறையருள் கிடைக்கப்பெ மாணிக்கவாசகர், "நாயிற் கிடையாய் கிடைந்த அடியேற்கு தாய் சிறந்த தாயவான தத்துவனே" (சிவபுராணம் ப. 60) என்று நம்மையும் ஒரு பொருளாக்கி நாய் சிவிகை ஏற்று வித்து என்று கூறுவது இறையன்பின் மேன்மை உணாந்த பாங்கைக் குறிக்கிற நமக்கு கிடைத்த நல் ஞானமாகிய பொருள் மற்றவாக்குக் கிடை வில்லையே என மனம் நெகிழ வேண்டும் இல்லாதவாகளை ஏழைகளையும் கண்டு மனம் இரக்க நிலை எய்தவேண்டு "நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருக வேண்டும் என்ப அருணகிரிநாதா. இவ்வாறு முன்னோர்களின்வழி கருணையோ இருந்தால் உலகம் உன்னதநிலையடையும் என்பது திண்ணம்".

**ஆன்மீகப் பயிற்சி**

வள்ளலார் பெருமான் ஆன்மீக வழியில் மனிதனை பக்குவப்படுத்துவது மட்டுமல்லாமல் யோகா பயிற்சியின்வழி மன குலம் வாழ்வாங்கு வாழும் என்று உணாந்தார். யோகாவை ஒருவர் வாழ்வில் அன்றாட பின்பற்றும் வழக்கமான பயிற்சியாக மேற்கொள் வேண்டும் என வலியுறுத்தினார். தியானத்தின் வழக்கமான பயிற் ஆன்மீக அறிவொளியை அடைய மற்றும் தெய்வீகத்துடன் இணைக் உதவுகிறது என்று அவா நம்பினார். மனிதன் மரணமிலா பெருவாழ் வாழ வேண்டும் என்ற உன்னத நோக்கம் கொண்டார். மரணமில்ல பெரு வாழ்வு இறைவனோடு கலப்பதை குறிழப்பது. மறுபிற இல்லாதது. இதனையே ஔவைப்பிராட்டி அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றார். இந்த மனித பிறப்பு எடுத்தவுடனே இறப் என்பது நிச்சயம் நிகழும். இந்த மனித பிறப்பில் அடுத்தவாகள துன்பப்படுத்துவதையும், தான் மட்டும் முன்னேறி செல்ல வேண்டும் என்ற சிற்றின்ப ஆசையையும் விடுத்து இறை சிந்தனை மேலோங்கி வாழ்ந்தால் இறைவனடி நிச்சயம். அப்படி இறை சிந்தனையோடு வாழ்வபனை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்
உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்." (குறள. 50)

என்றார். வள்ளல் பெருமகனார் தான் பெற்ற முத்தேக சித்தியைப் பல பாடல்களில் எடுத்துரைக்கின்ற தன்மையை விளக்குவதாக,

"நானே தவம் புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்
நானே அருட்சித்தி நாடடைந்தேன் நானே
அழியா வடிவம் அவை மூன்றும் பெற்றேன்
இழியாமல் ஆடுகின்றேன் இங்கு" (திரு. பா. 5513)

என்றும்

"ஆடுகின்ற சேவடிக்கே அளானேன் மாளாத யாக்கை பெற்றேன்
கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிருந்து குலாவுகின்றேன்
பாடுகின்றேன் எந்தை பிரான் பதப்புகழைப் பாடிப்பாடி
நீடுகின்றேன் இன்பக் கூத்தாடுகின்றேன் எண்ணமெலாம்
நிரம்பினேனே" (56)

இவை போன்ற பல பாடல்களால் தான் மரணமில்லா பெருவாழ்வு வாழ்ந்தப் பயனைக் கூறி உலக மக்களை நெறிப்படுத்துகிறார் வள்ளலார்.

## இல்லற நெறி

ஒருவன் இல்லறத்தில் வாழ்ந்து கொண்டு தெய்வீக நிலையை அடைய முடியும் என்கிறார் வள்ளுவா. வாழ்க்கையில் மேம்பாடாக மதிக்க வேண்டியது இல்லற வாழ்வு. நல்லதையும் உயாவையும் பாராட்டியும், குறைகளை எடுத்து விளக்காக சொல்லியும் நிறைவாக வாழ முயற்சி செய்ய வேண்டும். "பிறர் உயிர் வாழ துணையாக நிற்கவும், ஒருவரோடொருவா கூடிவாழவும் செய்யும் ஒப்பற்ற வாழ்வே திருமணம் என்பதை, வாழ்க்கையைக் கூட்டுப் பொறுப்பில் நடத்துவதற்குப் பலரறியச் செய்து கொள்ளும் ஒப்பந்தம் திருமணம்ஞ (பெரியார், ஈவெ.ரா. சிந்தனைகள் ப. 85) என்கிறார். வேதாந்த மகரிஷி திருமண வாழ்வை வாழ்த்தி,

"இறையுணாவும், அறநெறியும், கல்வி, தனம், தானியம்
இளமை, வலிவு, துணிவு, நன்மக்கட்பேறு
அறிவிலுயாந்தோர் நட்பு, அன்புடைமை, செல்வம்,
அழகு, புகழ், மனித மதிப்புணாந்தொழுகும் பண்பு
பொறையுடைமை எனும் பேறு பதினாறும் பெற்று
போற்றலுக்கும் தூற்றலுக்கும் வாழ்த்துக்களே கூறி

என்றார். வள்ளல் பெருமகனார் தான் பெற்ற முத்தேக சித்தியைப் பல பாடல்களில் எடுத்துரைக்கின்ற தன்மையை விளக்குவதாக,

"நானே தவம் புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்
நானே அருட்சித்தி நாடடைந்தேன் நானே
அழியா வடிவம் அவை மூன்றும் பெற்றேன்
இழியாமல் ஆடுகின்றேன் இங்கு" (திரு. பா. 5513)

என்றும்

"ஆடுகின்ற சேவடிக்கே அளானேன் மாளாத யாக்கை பெற்றேன்
கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிருந்து குலாவுகின்றேன்
பாடுகின்றேன் எந்தை பிரான் பதப்புகழைப் பாடிப்பாடி
நீடுகின்றேன் இன்பக் கூத்தாடுகின்றேன் எண்ணமெலாம்
நிரம்பினேனே" (56)

இவை போன்ற பல பாடல்களால் தான் மரணமில்லா பெருவாழ்வு வாழ்ந்தப் பயனைக் கூறி உலக மக்களை நெறிப்படுத்துகிறார் வள்ளலார்.

## இல்லற நெறி

ஒருவன் இல்லறத்தில் வாழ்ந்து கொண்டு தெய்வீக நிலையை அடைய முடியும் என்கிறார் வள்ளுவா. வாழ்க்கையில் மேம்பாடாக மதிக்க வேண்டியது இல்லற வாழ்வு. நல்லதையும் உயாவையும் பாராட்டியும், குறைகளை எடுத்து விளக்காக சொல்லியும் நிறைவாக வாழ முயற்சி செய்ய வேண்டும். "பிறர் உயிர் வாழ துணையாக நிற்கவும், ஒருவரோடொருவா கூடிவாழவும் செய்யும் ஒப்பற்ற வாழ்வே திருமணம் என்பதை, வாழ்க்கையைக் கூட்டுப் பொறுப்பில் நடத்துவதற்குப் பலரறியச் செய்து கொள்ளும் ஒப்பந்தம் திருமணம்ஞ (பெரியார், ஈவெ.ரா. சிந்தனைகள் ப. 85) என்கிறார். வேதாந்த மகரிஷி திருமண வாழ்வை வாழ்த்தி,

"இறையுணாவும், அறநெறியும், கல்வி, தனம், தானியம்
இளமை, வலிவு, துணிவு, நன்மக்கட்பேறு
அறிவிலுயாந்தோர் நட்பு, அன்புடைமை, செல்வம்,
அழகு, புகழ், மனித மதிப்புணாந்தொழுகும் பண்பு
பொறையுடைமை எனும் பேறு பதினாறும் பெற்று
போற்றலுக்கும் தூற்றலுக்கும் வாழ்த்துக்களே கூறி

மறைவிளக்கும் உயா வாழ்வை மதித்து ஒழுக்கம் காத்து
மனைவி கணவன் வாழ்வில் ஒளிவிளக்காய் வாழ்க"

(ஞா.க. 513)

என கணவன் மனைவி நட்பு மதிக்கத்தக்கது என்கிற வள்ளல் பெருமானோ உள்ளன்போடு இருவரும் வாழ வேண்டு பிறன்மனை நயவாமை வேண்டும் என்பதை,

"மஞ்சட் புச்சின் மினுக்கி னிளைஞர்கள்
மயங்க வே செய்யும் வாள்விழி மாதாபால்" (திரு. பா. 252)

என்கிறார். மேலும் இல்லறம் ஓம்புதல் பற்றியும், குடும்பநிலை பற்றிய அறிவுறுத்தல், உடல்நலம் பேணும்முறை, குழந்தைப்பே போன்றவற்றை தன் பாடல்களில் கூறி மனிதனை நெறிப்படுத் யுள்ளார் வள்ளலார்.

## தொகுப்புரை

ஆக மனிதராய் பிறந்தவா வாழ்ந்தோம் மடிந்தோம் என் இல்லாமல் இவ்வுலகிற்கு ஏதாவது ஒரு நற்பயனை செய்தா அவாகளை இவ்வுலகம் உலகம் உள்ளவரை வாழ்த்து அவ்வகையில் வள்ளல் பெருமானின் செய்த செயற்கரிய செயல்க மனிதனை மனிதனாக மாற்றவும், எவ்வுயிரையும் தம் உயிர்போ எண்ணும் உன்னதப் பண்பையும் ஏற்படுத்துகிறது. ஆ இவ்வுலகத்தில் அன்பு கருணை இவைகள் நிலைத்து நின்று உலகைக் காக்க வேண்டுமானால் வள்ளலார் போன்ற மகான்களின் வாழ்வியல் நெறியைக் கடைபிடித்து வாழ்வோம். இவ்வுலகை மேன்மையுற உதவுவோம். வாழ்க பாரதம். வாழ்க தமிழ்.

## துணை நூற்பட்டியல்


1. திருக்குறள்
2. திருவருட்பா
3. வேதாத்திரி, ஞானக்களஞ்சியம்
4. தேவாரம்
5. திருவாசகம்
6. திருமந்திரம்
7. www.google .com